# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. C.C. No.273/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-4, L.W- 3 |
| Name | : Selvam(Forester) | Defence | : |
| Father Name | : Jayaraman | Court | : |
| Village | : Ariyalur Forest Office | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 44/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 01.07.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் வனச்சரகத்தில் வனவராக பணிபுரிகிறேன்.வழக்கு சமயத்தில் சீர்காழி வனச்சரகத்தில் வன காப்பாளர் மற்றும் ஓட்டுனராக பணிப்பரிந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். நானும், அ.சா, 1 , அ.சா, 2 மற்றும் அ.சா, 3 ஆகியோர்களுடன் கடந்த 30.09.2016 அன்று காலை 10 மணியளவில் சீர்காழீ தென்பாதி கணபதி நகரில் நால்வரும் ஆய்வு செய்தபோது சந்தேகத்திற்கு இடமாக ஆஜர் எதிரி கையில் ஒரு பையை வைத்துக்கொண்டு இருச்சக்கர வாகனத்தில் நின்றுக்கொண்டிருந்தார். சந்தேகத்திற்கு இடமான பையை ஆய்வு செய்தபோது அதில் ஒரு புள்ளி மூக்கு வாத்து இரண்டு இருந்தது. ஆஜர் எதிரியை விசாரித்தற்கு அவர் முன்னுக்கு பின்னாக பதில் அளித்தார். பின்னர் ஆஜர் எதிரி வாத்துகளை வைத்திருப்பது குற்றம் என்று குற்ற சம்பவம் குறித்து நாங்கள் எடுத்துக்கூறியதும் அதை எதிரி ஒப்புக்கொண்டார். அ.சா.1 ஆஜர் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று ஆஜர் எதிரி வைத்திருந்த வாத்துகளில் ஒன்று இறந்துவிட்டது, மற்றொன்று உயிருடன் இருந்தது. அதனை அ.சா. 1 கைப்பற்று மகசரில் ஆஜர் எதிரியிடமிருந்து கைப்பற்றினார் . ஆஜர் எதிரி வைத்திருந்த இருச்சக்கர வாகனத்தையும் அ.சா. 1 மகசரில் கைப்பற்றினார் . மேற்படி எதிரியிடமிருந்து கைப்பற்றிய இருச்சக்கர வாகனகத்தையும், வாத்தையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்து திரும்பவும் எங்களது

அலுவலகத்தில் பெற்றுக்கொண்டோம். இறந்த வாத்தை பிரேத கூறாய்வு செய்து புதைத்து விட்டோம். உயிருடன் இருந்த வாத்தை நாகப்பட்டிணம் மாவட்ட வன அலுவலகத்தில் அனுமதிப்பெற்று அடர்ந்த வனப்பகுதியில் பறக்க விட்டோம். வனசரக அலுவலர் என்னை விசாரித்தார்.